# Tributes

## *In Remembrance of*

# Late Dr.R.U.Pillai

**(BDS (Cey), M.Sc.(bacteriology),M.Sc.(Virology),**
**Dip. in Tropical Medicine(Lond.)**
**of**
**University of Jaffna**



**எமது நெஞ்சங்களில்**
**வைத்திய கலாநிதி. R.U. பிள்ளை**

**23.01.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்



## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடக்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Advisor Ministry of Science and Technology

I was shocked to hear of the sudden death of Dr.R.U.Pillai shortly after he commenced to work as Senior lecturer in Microbiology at the University of Jaffna. It is ironic that while being a specialist in diagnosing infectious diseases he shoul die of a severe gastro-intestinal infection. When I heard of his death the thought of it being connected with ongoing war did occur to me.

Dr.R.U.Pillai was a student of mine at the Postgraduate Institute of Medicine where he obtained a Diploma in Microbiology. He was a keen student and thereafter devoted his life to this important field of microbiology and worked in Britain with distinction for a period of 10 years. Despite the ongoing war he had decided to dedicate his life to serve the people of Jaffna, by offering his services to the University. He had the capacity to have helped in the training of doctors and other medical and para medical personnel in the field of microbiology and to bring them up to date with the most recent international developments in this field. His premature demise is a great loss to the health services of Jaffna.

I do feel a personal sense of loss as he was a humble and friendly person who retained human values despite his professional advancement. He was not interested in making money but rather in serving patients and the people. At a time when the country is short of microbiologists he would have strenghtened our profession and filled the void in the North.

I express my deepest sympathics to his wife Dr.(Mrs.) Vani Pillai and the children Bhanugoban, Barath Umasanger and Chenthuran and hope that they too will follow his excellent example in the service of humanity.

**Prof. Tissa Vitarana**
Advicer
Ministry of Science and Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Dean & Professor of Microbiology

**Faculty of Medicine**

**University of Colombo, Sri Lanka.**

**16.01.2001**

## Dr. R.U. Pillai

It is with a sense of shock and sorrow that I heard about the passing away of Dr. Pillai. I have known Dr. Pillai since he followed the Diploma in Microbiology course in 1989 and subsequently he kept in contact with me. He was an honest, kind and concerned human being. He had a mind that was dedicated to academic pursuit. At the time of his death he had just taken up a post as lecturer in Microbiology in the Faculty of Medicine, University of Jaffna. Between his studies with us and this appointment he had gained valuable experience working for the Public Health Laboratory Services in UK.

I am indeed sorry that he was unable to make a contribution as a teacher in the University of Jaffna. I know that he would have enjoyed such work. My heartfelt sympathies and good wishes are sent to his wife and children. May his Soul Rest in Peace.

**Professor Lalitha Mendis**
MBBS(Cey), MD (Col),
PhD(Lond.), Dip Bact (Manch)
Dean & Professor of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna

16.01.2001.

# Message from Vice-Chancellor

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் இரங்கற் செய்தி

டாக்டர் உக்கிரப் பெருவழுதிப்பிள்ளை அவர்கள் இங்கிலாந்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடததில் ஓரிரு கிழமைகள் விரிவுரையாளராகப் பணிபுரிந்து, பின் நோய்வாய்ப்பட்டு மிகக்குறுகிய காலத்தில் மரணமடைந்தது நெஞ்சை உருக்கும் நிகழ்வாகும்.

நான் அவரை இங்கிலாந்தில் சந்தித்தபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் தான் கடமைபுரிய வேண்டும் என்ற தன் பேரார்வத்தை எனக்குத் தெரியப்படுத்தினார். அதன்படி இங்கு வந்து மருத்துவபீடத்தில் சிறிதுகாலம் பணியாற்றி, ஈற்றில் அங்கிருந்தே தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டார். நீண்டகாலம் இங்கிலாந்தில் பணிபுரிந்தபோதும் அவரது இறுதிக்காலம் அவர் பிறந்த மண்ணிலேயே அமையவேண்டும் என்பது கடவுளின் நியதி போலும்.

நுண்ணுயிரியல், கிருமியியல் துறைகளில் நிபுணத்துவம்பெற்ற டாக்டர். பிள்ளையவர்களின் பிரிவு யாழ்ப்பாண மக்களுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இன்றைய நிலையில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அவரது பிரிவால் துயருறும் அவர் மனைவி மக்களுக்கு இறைவன் மனஅமைதி அளிப்பானாக. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள்புரிவானாக.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாநதி !

துணைவேந்தர்.
**P. Balasundarampillai**
**Vice- Chancellor**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
17.01.2001.

# MESSAGE FROM DEAN MEDICINE
## A DEDICATED DOCTOR

When I heard that Dr.R.U.Pillai is coming from London to serve in the Microbiology discipline of Pathology department, I was relieved because an experienced hand is going to join our Faculty. When he met me, he was with full of enthusiasm and promised that he would be able to upgrade the activities of the Microbiology discipline He requested a list of facilities to upgrade the department. He delivered two hours of lectures. All these happened for one week and the next week I heard that Dr. Pillai has passed away when he was in the I.C.U. The expectations, the happiness and hopes of the Faculty have been destroyed. I have the responsibility of not only giving condolence to Dr. Pillai's family members but also to my dear students who have been awaiting to satisfy their thirst with Dr. Pillai's service. Our Faculty has lost another dedicated teacher who returned to his mother land with lots of hopes and dedications. I give my heart felt condolence to Dr. Pillai's family members and pray to God to settle Dr. Pillai save in peace.

Prof.(Miss) V.Arasaratnam
Dean / Medicine
University of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
18.01.2001.

# MESSAGE FROM
# DR.R.RAJENDRA PRASAD
## HEAD / PATHOLOGY

When I heard the sudden demise of Dr.R.U.Pillai I got shock with full of regrets. He was a gentle man and gained the respect of staff and students within a week. Also he was a man of determination and I really expected the Microbiology section of the Pathology department to move in the inter nation circles. Unfortunately his death was a severe blow to my activities to up lift the department of Pathology in teaching, research and service. I have to console myself by interpreting my activities as part of a game. Further his sudden death was a great loss to his family, at atime when his children were studying in the universities to get their undergraduate degrees. I pray to God to settle his soul - in peace and also to give more strength to his wife to over come this crisis.

**Dr.R.Rajendra Prasad.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Senior Lecturer Department of Surgery, University of Jaffna.

My acquaintence with Dr.R.U.Pillai was all too brief in view of his tragic and unexpected death. He was a neighbour while he was in Jaffna as he stayed at the University Guest House while I was in the annexe. Even so I met him only briefly a couple of times due to the nature of our work.

From our conversations I came to realise that he had a sincere desire to work in the Faculty of Medicine in the Department of Microbiology. Why also would to have left his family and come to Jaffna. His interset in teaching was evident from his queries to me regarding references to certain mosquitoes but even this had him analysing the prevalence of the different strains present! While in hospital too he was trying to find a bacteriological cause for his illness. It is ironic that one of the glaring deficiencies in Jaffna is the lack of a good Bacteriology service which might have proved helpful in his case too.

His attachment to his family was obvious. When I visited him in hospital soon after his admission he was trying to downplay his illness but wondered whether he felt worse because of home sickness. From his wife I learned of how supportive he has been to her and the children.

He will be sorely missed by his family for whom his loss will be ever felt. The medical faculty which is already suffering from shortages of staff will also miss his presence. His death however may prove a motivator to students to dedicate themselves to join and serve the faculty themselves.

For Dr.(Mrs.) Pillai and children I can only pray that time will heat the wound of his loss while preserving the joyful memories.

**Dr.D.C.Ambalavanar FRCS Ed.**
Senior Lecturer
Department of Surgery
Faculty of Medicine
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**General Hospital, Jaffna**
**18.01.2001.**

# Loss to Jaffna Society

IN MEMORY of Dr. Ramanathapillai Ukkiraperuvaluthipillai known as Dr.R.U.Pillai ('Ukkiri') is the son of late Thambiah Ramanathapillai, retired Teacher of Thumpalai, Point Pedro was a Dental Surgeon. He was away from Sri Lanka and was in Colombo with his family for a month. He joined the Faculty of Medicine, Jaffna Hospital to meet me in my office. He was very interested in improving the laboratory of the Hospital. As we don't have a Microbiologist in the hospital, he told me that he had enough contacts in UK. who were willing to improve the facilities in Medical Faculty and hospital. The Faculty and the hospital were thrilled to have his services but the Jaffna patients and students as usual have been deprived of his services by God's will.

Any how he was lucky that he had come back to his motherland and was cremated in his home town, Thumpalai and his beloved wife and eldest son were able to come over to Jaffna for his funeral in spite of the transport difficulties.

In my mind I was planning to getdown Dr. Pillai's wife who is a consultant at Cancer Institute Maharagama. Because at some stage she could visit her husband and extend her services to our patients.

Hence the longstanding dream of our public and cancer patients could be realised. But again we are in square one.

Dr.(Miss)N.Kanagaratnam,
Director,
G.H. Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from President
# College of General Dental Practioners
# My Intimate Friend
## DR.R.UKKIRAPERUVALUTHIPILLAI

The news of the untimely death of Dr.R.Ukkiraperuvaluthipillai on 23rd December 2000 after a very brief illness was met with great shock and sadness by all his friends and colleagues. I met Ukki ( as he was fondly called ) for the first time in 1968 when we entered the Dental School of University of Ceylon (Peradeniya Campus ). He met me in my surgery in Colombo again on the 12th December 2000 for the last time to say goodbye as he was leaving for Jaffna to take up an appointment as a Senior Lecturer in the Microbiology Department of the Faculty of Medicine. Providentially he told me that this could be the last time he will meet with me. He was a good family man and he spoke to me about his children. He wanted me to request my wife ( who is a physician ) to attend to the medical needs of his wife.

At this meeting he gave me a scientific paper he had written requesting me to have it published in one of the Dental Journal in Sri Lanka. He had on earlier occasions published his works in the Journal. **GENERAL DENTAL PRACTITIONER** and the **STUDENT JOURNAL, MIRROR AND PROBE OF THE UNIVERSITY OF CEYLON (PERADENIYA).** After serving the Department of Health for a short time he obtained his Diploma in Virology and Diploma in Tropical Medicine in Sri Lanka.

I came to know him very intimately at the University of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ceylon (Peradeniya) when we were students from 1968 to 1972. I could recall many an instance where he stood loyaly by me and his friends in our student activities at the University. He always fought for Justice and fairplay which I considered an admirable quality in him. He was fearless when he felt he was right. Ukki was a socialist in the true sense of the word. He always wanted to work for the common good of the people. Whilst in the University he was very happy if he could be of any assistance to his fellow students. He would always seek out the downtrodden, the depressed and the meek to make them more comfortable and happy.

Ukki was always calm and unruffled. He was a good listener with a keen sense of humour. He always knew what was right and strived for Justice though on many occasions he could not ensure it being done. He was always prepared to become involved with a cause as a part of the team. He will be long remembered by those privileged to have known him and worked with him for his great skill and dedication in his chosen profession and for his delightful sense of humour, his kindness, generosity, hospitality and warm friendship. The world is poorer place without him.

My heartfelt condolences go out to his loving Wife Vani, Sons Bhanugoban. Barath Umasankar and Chenthuran.

May he obtain eternal bliss.

141, Vauxhall Street,
Colombo -02.

**Dr. Hilary Cooray**
BDS(Cey),M.Sc.(Lond.)
F.I.C.C.D.E.(Orthodontic)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dental Institute, Colombo.**
**18.01.2001.**

# Enthusiastic Dr.R.U.Pillai

It was a shocking news to hear about the sudden demise of our dear colleaque Dr. R. U. Pillai. He was so hale and hearty when he visited the Dental Institute about two weeks earlier.

We had the priviledge of associating him as one of our batchmates at the Dental School, Peradeniya where he contributed his opinion many a time in any discussion that was held. There were arguments but all ended in good faith. He was such an interesting charater who could keep any audience alive. He was a down to earth simple man who was quite independant, devoid of envy, jealousy and greed. He was very impartial and always stood by what he beleived was correct.

After graduating as a Dental Surgeon, his vision and enthusiasm made him to specialize in a different field in Microbiology in spite of his disability. He proceeded to UK and returned to Sri Lanka after 10 years, having obtained M.Sc in Bacteriology,M.Sc in Virology and Diploma in Tropical Medicine. It is very unfortunate that the country could not make use of his offer when he volunteered himself to work at the Jaffna University under difficult circumstances.

Within a short time, because of his professional skills, devotion and concern for the students, he has left an indelible imprint on the minds of those students at the Jaffna University.

The large gathering at the funeral ceremony was an ample testimony to the high esteem in which he was held. He will be sadly missed and fondly remembered not only by his beloved wife, Vani, and three sons but also by his long standing friends and dear colleagues.

May he attain the eternal peace.

**Dr. Priya Samaranayake** **BDS (Cey), D.D.O.R.C.P.S.(Glasco)**
**Dr. Sriyani Kumarasiri** **BDS (Cey), D.G.D.P**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from a member of the Jaffna University Council

## DR.R.UKKIRAPERUVALUTHIPILLAI

I first came to know him in 1990, when I was the Director of North Lanka Medical College (Private). He came to me with a letter from my father introducing Dr. Pillai as his friend's son and to offer him a lecturer post at N.L.M.C. I took him as a lecturer in Anatomy, though there were four others in the Anatomy Department, including a Professor and Senior lecturer. Later on, he proved to be the best out of the lot and students liked his art of teaching much better than other Lecturers, who were more qualified and experienced than Dr. Pillai. Why, he proved to be a good lecturer was that, he came down to the level of the students and taught them. He conducted lecturers and Tutorials even on Saturday, Sunday and on Public holidays and students could clear any doubts without any fear. So, the students at N.L.M.C loved him a lot.

In 1991, he left for U.K. to do Post Graduate studies. He continued to correspond with me with his progress in his studies. He did Diploma in Parasitilogy at the Tropical School of Medicine in London. In addition he did M.Sc. in Microbiology and M.Sc. in Virology. Later on, he was interested in Pathology and did MRCP Pathology and got through the Part I Examination. When he was preparing for the Part II Examination, he got in touch with me with the intention of getting a suitable post in the Jaffna Medical Faculty. On my suggestion, he applied to the Medical Faculty of the Jaffna University. With great difficulties, I got him selected as a Senior Lecturer in Microbiology. Thanks to Vice-Chancellor and the Former Dean of the Medical Faculty namely, Dr.Prasad who were very keen to select him. He was qualified and competent to teach Microbiology, Parasitilogy and Pathology. I thought with his selection, the shortage of staff in the Medical Faculty will be eased to a certain extent. Though he was selected, it took sometime for him to wind-up in U.K. He came here on 30th November, 2000. He had to wait in Colombo for sometime to clear his books and clothes which he sent by ship. As there was delay in clearing, he was impatient and told me, that the students are waiting for him. However he flew to Jaffna on 10th December, 2000. I had



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

made all the arrangements for his stay in the Doctor's quarters in Jaffna. Though he was in the Faculty for a very short time, he had impressed on the students as a good teacher and had become popular among them. This was amply demonstrated by the Medical students' Union who not only organised his funeral but also made arrangements to keep his body at a Medical Faculty, where a short ceremony was held. I am sure, had he lived he would have proved to the asset to the Medical Faculty. He has told the Dean and me, that he would try to get lecturers from U.K. to the Medical Faculty. Jaffna Medical Faculty has not been fortunate to have his services.

When he was in Colombo, he was offered a post in the Colombo Medical Faculty and also at Medical Faculty, Peradeniya as Senior lecturer in Microbiology, which he turned down. He could have accepted those posts and remained in Colombo with his family. But he opted to go to Jaffna as he was interested in the students of Jaffna. The Dean of the Colombo Medical Faculty, who is also the Professor of Microbiology had commented that Dr. Pillai is more qualified than some of the lecturers in the Microbiology Department. I am sure, that he is one of the most highly qualified in Microbiology in the Medical Faculties in Sri Lanka.

When I heard the bad news on that Saturday morning, I could not believe it and later, when it was confirmed I was terribly upset and spent the day mourning. Dr.(Mrs.) Pillai phoned me and asked me to make all arrangements for her and eldest son to go to Jaffna for the funeral. Though it was a Saturday and hence all the offices were closed, I managed to get the officers of the Ministry of Defence, Joint operations Head Quarters, Air Force Head Quarters at their residences and got clearance and ultimately sent them to Jaffna on the same Saturday evening by Service Flight. My thanks to these officers who helped me at very short notice.

His death is not only a personal loss to me but also a big loss to my brother's family in U.K., where Dr. Pillai was in and out of their house almost daily.

May his soul rest in peace.

12D, Rohini Road,
Colombo - 06.
15.01.2001.

Dr.S.Sivanandarajah
Member of the Jaffna
University Council.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றோடு வந்த சேதி கனவெனவே போகாதோ!

## அமரர் Dr.R.U.பிள்ளை அவர்கள


BDS(Cey), M.Sc(Bacteriology),M.Sc(Virology), Dip in Tropical Medicine
சிரேஷ்ட விரிவுரையாளர், நுண்ணுயிரியல் துறை,
மருத்துவபீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.


கானல் நீர்க் கனவுகளே
கண்களுக்குச் சொந்தமாக...
காற்றோடு வந்த சேதி
கனவெனவே போகாதோ!
நேற்றுவரை எங்களுடன்
நேசமாய் இருந்து விட்டு
நேரம் வராத போது - நீர்
நீள்துயிலில் ஆழ்ந்ததேனோ?
யாரோடு நாம் நோவோம்?
யார்க்கு நம் துயர்சொல்வோம்?
கைகளிலே கிண்ணமேந்தி...
கலகலப்பாய் சிரிக்க வைத்து
கைகொடுத்து வந்த - அந்தக்
கணச் சூடு மறையமுன்பே
கண்களிலேயே நீரருவிக்

காட்சியினைத் தந்துவிட்டு
காலன் அழைப்பை யேற்றோ
காத தூரம் சென்று விட்டீர்?
பிரியாமல் என்றென்றும்
பிரியமுடன் கற்பிப்பீர்
பிள்ளை நீரென்று
பிள்ளைத் தனமாகப்
பிழையாக எண்ணிவிட்டோம்.
எம் செயலோ யாதுமில்லை.
என் செய்வோம், கொடிய விதி!
இதயம் குமுற இங்கு.....
இளையவர்கள் நாம் கூடி
இனிமை மணம் சொரிந்த
இனிய(அ)வர்க்குப் பூச் சொரிவோம்

19ம் அணி மருத்துவபீடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் Dr.R.உக்கிரப் பெருவழுதிப்பிள்ளை

### அவர்கள்

**BDS(Cey), M.Sc(Bacteriology),M.Sc(Virology), Dip in Tropical Medicine**

சிரேஷ்ட விரிவுரையாளர், நுண்ணுயிரியல் துறை,
மருத்துவபீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

"ஒருவேளை
உங்களை நாங்கள்
சந்திக்காமற்
போயிருந்திருக்கலாம
கனவுமயமான வீதிகளில்
யாரோ ஒருவராக
வாழ்ந்தீர்கள். மறைந்தீர்கள்
என்று போயிருக்கும் உங்கள்
பிரிவு
- எங்களிற்கு
எட்டாததொன்றாக -
ஆனால் ஐயா!
கனமான பயணத்தில்
எம்மோடு
கைகோர்க்கத் துணிந்தீர்
அதனால் எங்கள்
கண்களில் பெருகும்
சோகத்தைத் தந்து சென்றீர்
தேசங்கள் பல போயும்
தாய் மண்ணில்
உயிர் பிரிந்தீர்
அதிருஷ்டசாலி ஐயா
நீங்கள்
ஆனால்
இரண்டு மணித்துளிகளை
மட்டுமே
எமக்கென்று தந்து
எம்மைத் துரதிஷ்டசாலிகள்
ஆக்கி விட்டீர்
அது ஏன்?"

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தவர்களுக்கு
ஆறுதல் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும

20ம் அணி மருத்துவ மாணவர்கள்
மருத்துவபீடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப் பெருந்தகை Dr.R.U.பிள்ளை

## மாணவர் ஒன்றியம்

எமது பீடத்தின் நுண்ணுயிரியல் துறைக்கு புதிதாக விரிவுரை யாளராக நியமிக்கப்பட்ட Dr.R.U.பிள்ளை அவர்களின் திடீர் மறைவினால் எமக்கு ஏற்பட்ட இழப்பு வார்த்தைகளால் விபரிக்க முடியாதது. எமது மண்ணில் கல்வி கற்று உயர் நிலையிலுள்ள எத்தனையோ பேர் உலகநாடெங்கும் பரந்திருந்த போதும் ஒரு சில சேவை மனப்பான்மை கொண்டடோரே போரினால் நலிவுற்றிருக்கும் ஈழமண்ணில் பணியாற்ற முன்வருகின்றார்கள். இப்படியானோரின் சேவையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எமக்கு பேரிடி போலமைந்தது Dr.R.U.பிள்ளை அவர்களின் திடீர்ப் பிரிவு.

யாழ். மருத்துவபீடம் மற்றும் யாழ். போதனாவைத்தியசாலை ஆய்வுகூடம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் பல பணிகளையாற்றத் திட்டமிட்டிருந்த எமது விரிவுரையாளரின் மறைவு எமக்குப் பேரிழைப்பாகும். ஒரிரு விரிவுரைகளை மட்டுமே நடாத்திய போதும் மிகவும் அன்பான முறையில் எம்மோடு பழகி, சிறந்த முறையில் கற்பித்து எம் நெஞ்சங்களிலெல்லாம் நீங்கா இடம் பிடித்துவிட்டார் அமரர்.Dr.R.U.பிள்ளை அவர்கள்.

என்ன செய்வது? எல்லாம் விதி வசம். யாழ் மருத்துவபீடம் செய்த பாக்கியம் இவ்வளவுதான் போலும். அன்பு ஆசானின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவமாணவர் ஒன்றியம்
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr.R.U.பிள்ளையின் வாழ்க்கை வரலாறு

முத்துச் சிதறாய் சீர்பொழியும் இந்துமா கடலின் மத்தியிலே
இலங்கைத் தீவின் முனையதுவாம் பருத்தித்துறையூரதனில் - நல்
வித்துக்கள் தோன்றிய தும்பளையம் பதியிலே
கலங்கரைத் தீபஒளி விழு வளம்பெறு புவியதனில்
வேளான் குலத்தரு வித்தகன் - ஆசிரிய திலகங்களின்
தலைவனும் தம்பையா மகன் இராமநாத பிள்ளையெனும்
வள்ளல் நற்குணவதியாள் மானாள் செல்வதியாள்
விலையிலா மாண்பாள் கரம்பற்றி இல்கூடி வாழ்ந்த காலை
பிள்ளையார் கடைக்கண் கூடிவர - நித்திய செல்வமென
மழலை பொழிந்திட

கலைகள் வல்லானாக ஆடியிலே சுபவேளையிலே
ஏமுடன் இருபத்தைச் சேர்த்திட்ட கலையதனில்
விலையில்லா மாணிக்கமாய் ஐம்பதாம் ஆண்டிலே
மூன்று கழியா வேளையிலே
சூழும் வினையகல - தாய்மடியில் முத்துச் சேயாக
குணவான் தந்தை இட்டவழி நடந்திட்டே
சுற்றம் உற்றம் பாசத்திலே திழைந்திடவே கடல்
மணப்பரப்பிலே உருண்டோடிக் கருத்தொருமித்த
குற்றம் குறைகாணா தோழருடன்
மாணவப் பிராயந்தன்னை வீதியெங்கும் கலகலப்பாக்கி
சற்றும் சோர்விலாப் பிள்ளையாக வலம்வந்தீர்
கனவான் போல் இருந்திட்டே சேட்டைபல
செய்திடும் பள்ளிப்பருவமய்யா எண்ணியும் நகைத்திடுவீர்
நினைவாக கொப்பியில் எழுதிவைத்த செய்தியெல்லாம்
இன்றும் பகிர்ந்திடுவீர் சிறார் உம் மக்களுடனே

சின்னச் சின்னக் குறும்புகள் செய்வதிலும் - கூடிக்கலந்து
சிந்தனையில் தீதின்றி பலரும் சிரிக்க வென்று - வம்படித்த
மன்ன நின் மால்வண்ண உடல் மேலும் கறுத்ததுவோ
வெந்தமணலதுவும் வடலியடிப் பாதையதும் புளியடியும் போய்க்ளைத்து
சொன்னகதைபடித்து - கருத்துடனே கவிபடித்து
அந்த நாளில் கல்வியிற் சிறந்த கனவான் பலதந்த
சின்னமான ஹாட்லிக் கல்லூரியதனில் பல்கலைக்கழக
புகுமுக பரீட்சை வரைக்குமே பயின்ற பேறுபெற்றே
சிந்தையில் சீரோனாய் கல்வியிலே முதல்வனாய்
இந்தக் கணம்வரை கனன்றவளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்

தூயவன் நீ பிறந்த பின்னாலே அவ்வையெனும் - நங்கையவள் நன்றாக
  உன்னுடன் சேர்ந்து ஓரடியும் எண்ணிவைத்து
ஆயகலைகள் பயின்றும் பின்னாளில் நின்போல் கொவ்வை இதழில்
  புன்னகை சிந்திடச் செய்யும் முத்துப்பல்லதன் சிகிச்சை பால்
சாய அவள்பின் கொற்றவள் போல நடுவிற் பிறங்கா
  மன்னுபுகழ் செல்வகடுங்கோ எனும் வைத்திய திலகம்
தாயின் பரிவுக்கு துடிக்கும் சேயாக
  படிப்பில் துடிப்புகள் காட்டிட்ட தம்பி - அழகேஸ்வரனும்
ஓயாது பாசமும் அனபோடும் புன்னகைத்த - குணம் பல கொண்டிடும்
  சோராது பாடம் பல புகட்டிடும் - கடையில்
சேயாம் தங்கை செல்வமலரும் - மெதடிஸ்ட
  கல்லூரி ஆசிரியை ஆனாளே

## திருமணம்

நீர் பொழியும் பரணிநகரதுவாம் அனுராதபுரந்தனிலே
  சேவை நீ செய்யுங் கால் கலைபலவும் வல்லவளாம்
கார்குழலாள் அவள்தான் வண்ணைசேர் ஓய்வுற்ற
  புகை யிரத நிலைய அதிபர் தளையசிங்கம்
சார்ந்திட்ட மாதரசி நவாலியூராள் மங்கையற்கரசி திருமகள்
  நகை முகத்தாள் கலைவாணியெனும் பாவை
பார்வைதனை விலைமதித்த பெறும் பேறாகவே - சீதனம் கேளாத்
  தகையினைக் கொண்ட கோனாய் அந்நாளின்
போர்க்கோல மமைந்த சூழலிலே - விரும்பியே
  கைப்பிடித்தனன் நன்னாளிலே.

அந்நாளில் அவளுடன் பிறந்தோராறுவர்
  அகவையில் குறைந்தோராய் இருந்திருகாலை - அருந்ததியெனும்
பின்னாளில் வழக்குரை நங்கை - கனடா வாழ் கணக்கறிவாளன்
  சிவலோகன மணம்புரி இந்திராணியவளும் கணக்கியல் பாளாம்
  - கூடவே
சின்ன மைத்துனி கணக்கியல் வித்தகி சீருடன் கனடா வாழ்
  ரவியவனின் ஏந்திழை மாலா - சரியாகச் சொன்னால்
கண்ணனையொத்தான் கணமும் சோர்விலா மன்னன் சிவனின் குமாரன
  காயத்திரியெனும் உத்தமி மணந்திட்ட மேலோன்- சந்திரனெனும்
நுண்கலை பயிற்றிடும் சீலன் - ஏந்திழை பிரியதர்சினி மணாளன் - உன்னைக்
கண்ணெனச் சுற்றிடும் குகனாய் வளர்ந்திட்டே தொழில் பல
  செய்திடும் லங்காதுணை சேர் சூரிய குமாரா என்றோருடனே
விண்ணிலே நின்ற தாரகையென உன்னைச் சார்ந்து
  உயர்வடையவே புதல்வர் மூன்று பெற்றுயர்ந்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்

முன்னாளில் இச்சிறார் சீர்பல சொல்லி தேன்குருவி
தேன்சிட்டு மாணிக்கம் மணிவண்ணா என்று கூறி
பொன்னென பொத்திப்பிடித்து பிள்ளையரை வாரித்தூக்கி
மெய்நோகுமென்று தலையணையில் ஏந்திவைத்து
அன்புடனே பேணிவளர்த்த உத்தமனாய் நீயிருக்க
தென்புடனே அவரிருக்கும் பதியதனின் சேர்ந்திடாது
துன்புடன் பிரிந்து வாழ்ந்திட்டாலும் தந்தை நீ
இன்புடன் அங்கிருக்க சேய் மழலையர் நெடுங்காலம் பிரிந்திட
ஒன்றுமட்டும் உறுதியா இருந்து தந்தைதாய்க்கு
ஒப்பிலா மக்களாய் இவர்கள் மேலிட

மழலையில் மூத்த செல்வம் பானுகோபன - இன்று உயிர்
துடிப்புள்ள இளைஞன் - கொழும்பு மாநகர்
*மருத்துவபீட* ஆரம்ப ஆண்டதனில் பயில - நடுவில்
குழந்தை பாரத் உமாசங்கரன எண்ணதனில் சிறந்து
விளங்கி - மொறட்டுவ *பொறியியல் பீட*மதனில் காலடி வைத்திட - கடைசிக்
குழவியது செந்தூரன ஈண்டும் படிப்பில் ஆர்வமிகு கல்லூரி வாழ்
மகவாய் *கொழும்பு இந்துக் கல்லூரி*தனில் சென்றிடுவாரே

செருக்கில்லா உன் மனமும் நிறைந்திட மைத்துனர்
மைத்துனியர் நிறையுளமாய் உன்சிறார் போற்ற
வருவேளையதனில் மனையாள் வாணியை மேலும்
நிறையவே படியென ஊக்கம் கொடுத்து - காதலியவள்
பெருவேலைகள் பலதான் தோள் சுமந்தே - தன்னுள் கனன்ற
அறிவுப் போதையில் மூளாய் வட இலங்கை
மருத்துவ கல்லூரிக்கோர் விரிவுரையாளனாகினான்
சிந்தை குளிர்ந்திடவே

முறிந்தது அந்த ஆசையும் முறையில் கேடாய்
சரிந்த ஆயுதம் சிதறிப் போயிட - ஊரைவிட்டே
வெறிய நினைவுடனும் சொல்லொனா துயரதனுடனும்
மனதில் கொழுந்த அறிவுப் பசியதுடனும்
சிறிய மக்கள் மூவருடன் கடிமணந்தாளையும் - பிரிந்து
கனவது செயல்பட கடிதெனச் சென்றனன் - லண்டன்
கலாசாலையில் முன்பே படித்ததைத் தொடரவே.

### லண்டனில்

மனைவியைப் பிரிந்தோனாய் - மழலையைப் பிரிந்தோனாய்
இருந்தாலும் உள்ளத்திலே உரமது கொண்டு விரக்திதனை
தினையாக்கி - தாய் மண்ணில் - தொலைத்தபண்டம் பொருளது
வருந்தாமல் கல்வியொன்றே வாழ்வுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக்கும் சொந்தமாம் - வாழும்பொழுதே
தொலைத்திடவும் அரியதுவாம் என்றே அதன்
துணைதனை மிகுகைக் கொண்டே கருத்தினில் அதனை
மாணிக்கமாய் கொண்டே

வாழ்வின் குறியது கல்வியதனை - தேடியே
குடத்து விளக்காய் விளங்காமல் தாமோ
மாள்வின் பாதையில் வந்து நிற்கும் - சீராய் பயில வகையிலா
இடம் பெயர்ந்தோடும் சூழலில் - மருத்துவ மாணாக்கர்
கோளின் பயனோ கொடுவினைப் பயனோ ஆற்றாத அந்த நிலையினை
கடந்ததாய் செய்து - அந்த மாநகர் லண்டன்
வாழும் குடிமக்கள் பலரும் ஆள்பாதி பொருள்பாதி
உதவிடக் கேட்டு - சிந்தை மகிழ்ந்து
யாழ் போதனா பீட மருத்துவக் கல்லூரியதனை - புத்துணர்வுடன்
பொலிந்து விளங்க - கருத்தொடு கவனம் எடுத்து
சூழவிருக்கும் பல்கலைக் கல்லூரிகளிலும் - இதுவே மேலாய்
சுடர்விடும் சூரியனாய் எழவே கருத்தில் இருத்தி

வடக்கே இருந்த வந்த பல்கலைக்கழக துணைவேந்தருடன்
கூடி ஆங்கே ஓரிடம் பெற்றே - தலைநகர் வந்து
நெடுநாள் பிரிந்த காதல் மனைவிமக்கள் - சிறு
நேரம் கண்ணில் ஓற்றி கதை சில சொல்லி - கடிது
விரைந்தனர் நன்மக்கள் தனைத்தந்திட்ட
வரையின்றி போர்ச்;ழலில் அகப்பட்டு துயருறும்
வடபுலவு நோக்கியே அளவில் ஆர்வமுடன்

அவர் ஆசை ஓர் பேராசைதான் -
ஆனால் நினைப்பிருந்தவை - செயல்பாட்டில்
தானா விட்டால் தன்னாலே வளர்ந்திடும்
பல்கலைக்கழகமாம் - செய்வதறியா
நிலையிலே - காலம் பொருதவில்லை
விட்டகுறை தொட்டகுறையாக
சுமந்த நினைவுகள் கனவுகளாக

நாள் சிலதில் கூடிய நண்பர் பேராசான்
பயிலவந்த மாணவர் இளையவர் இனியவரை
மணியாக்கி - சேர்த்து பயிற்றுவித்தே முன்னேற்றி
சரமாய் கோர்த்து தக்க புகழ்தேடி - அந்த
முத்தாரத்தை காணவிழைந்த நல்லிதயம் -
அவர்தம் கண்ணீர் முத்ததில் உணர்விழந்து
செயல்மறந்து - நீவர - உன்பாரம்
தோளில் சுமந்தவராக கடன் தீர்த்தனரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் குரல்

ஆண்டு 2000த்தை ஆர்வத்துடன் எதிர்கொண்டேன்
இன்னல் பல தந்த நாட்டினின்றும் ஏகி
அன்னைமண்ணைவிட்டு ஆண்டு பத்து (10)
சின்னக் காலமல்ல -
வண்ணம் பல காட்டிடும் காலநிலை நாடாம்
லண்டன் மாநகர் வாழ்த்து சந்த - என்
அண்ணல் உக்கிரி எனும் பேராசான்
வளமுடன் சந்தென் பிரிவுத்துயர் போயகல
துன்பமெலாம் போக்கிட சந்திடுவாய் என
எதிர் கொண்டே

வருடங்கள் பத்து ஐயா போக்கிவிட்டோம் சிக்கனமாய்
ஈந்த மக்கள் மூவரையும் சீராக வளர்த்துவிட்டேன் சிங்காரமாய் - தந்தை
வருடலுக்கு ஏங்கித்தவித்த மக்களை
சிந்தை மகிழ்வுடனே எதிர்கொண்டு வந்தணைக்க -உன்தன்
வருகையினை எதற்கெல்லாம் எதிர்பார்த்தோம்
இன்று நாளையென எப்போ நீ வருவாயென
பெரு உவகையுடன் கார்த்திருந்தோம்
பிள்ளைகளுடன் தாய் தந்தைநாம் கூடிக்கழித்திடவே

பிள்ளைகள் ஒவ்வொருவராய் கேட்டுவந்த
ஆசைப்பண்டங்களை தந்தை நீ வந்திடுவாய் - சேர்ந்து
அள்ளியே பகிர்ந்திடலாம் ஆனபொழுது- போக்கிவிட
வேடிக்கை விநோதங்களையும்
மெள்ளவே களித்திடலாம் - அன்புடனே
என்ற பிள்ளைகள் நெஞ்சில் மாளாத் துயர்த்தீ மூட்டிவிட்டீர் ஐயா
உள்ளத்தின் உன்நோக்கம் வடபுலவு நோக்கியே
அன்று வந்த உன்கனவை அறியோமம்மா
சின்னமகன் கேட்கின்றான் - சின்னதான
ஆசைகள் தீர்த்திட நீயிங்கில்லை

அழைப்புமணியடித்திடுமே தொலைதனிவிருந்து ஞாயிறது - வந்துடில்
அம்மாவோ என்றே உன்குரல் ஒலித்திடும்
களைப்பாக இருந்தாலும் காட்டிடாமல் நாமும்
உன் உடல் வாட்டும் குளிரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்து எமக்கு பணம் அனுப்பி வாடாதே என்றே
கேட்பதற்கெல்லாம் கிள்ளைகளும் நானும்
சளையாமல் எப்போதும் எதுவுமே வேண்டாம் என்றிடுவோம்.

உன்னை பிரிந்த பிள்ளைகள் வாடாது இருக்கவும்
வாணியோடு பிள்ளைகள் உன்னுடன் இல்லாநிலையில் கலக்கம்
உனக்கிரா வண்ணமும் என்னை ஈன்றவள் உன் மாமி
எம்மை பூப்போல ஏந்தியே பரிந்தணைத்திட்டாள்
நின்தன் குழந்தைகள் அனிச்சம் மலர் போல் முகம் மாறிடாதே
காத்தாள் அவர்தனையாருமே கடிந்திடாமல்
உன்னை தொந்தரவு செய்திட வையாள். அவளின் ஆசை
நீ உன் குழந்தைகள் மனையாளுடன் கூடியே மகிழ்ந்திட
தன்னாளே நித்தம் கடவுளை தொழுவாள்

நீண்ட வருடங்கள் நீ பிரிந்து இருந்தாலும்
வேண்டிய கல்விகள் நீ பயில இருப்பதனால்
கண்டதுக்கும் உன்னை வருத்தாமல் நாமோ
விண்ணிறைந்த தொடர் மாடியூராம் லண்டனில்
மண்டலகாலம் வாழுமுரிமை (Permanent resident)
நீ எடுக்கும் காலம்வரை - கருத்தொருமித்து
மாண்புடனே பொறுத்திருந்தோம் - சேர்ந்து வாழத்துடித்தே
பெண்ணிவளும் காத்திருந்தாள் கூடிவந்த காலனை
கண்டாளில்லை வேண்டாத வாழ்வாகி விரைந்து நீ
விண்ணுலகெய்தும் நாளோ அருகிலிருக்க அறியாளாம்

மூத்தமகன் குரல்

தனியாளாய் அம்மாவோ பொறுப்புகள் சுமந்திட்டாள்
தீராத நோயாளி ஆகிவிடாமலே - கெதியாக
நீவந்து நம்மிடம் சேர்ந்துவிட்டால் - புதிதாக
வாழ்க்கை இன்பமாக தொடங்கலாம் - வடக்கே நீபோக
போர்ச்சூழலில் எங்கே உனை இழப்போமோ - அந்த
பயத்தினால் பொருதிட்டோம் போகாதே என்றே
கெஞ்சினால் மிஞ்சுவாயென்றே மிஞ்சியும் - பார்த்திட்டோம்
தாளாத உறுதியுடன் நின்றாய் - எம்மேல் அன்புற்றோர்
காணோம் இனி உம்போல் அப்பாவை நாம்
எம்மேல் அன்புமக்கு கட்டுக்கோர் அளவில்லை
உம்சிறார் நாம்மூவர் உம்மிடம் கொண்டுள்ள
அன்புக்கோர் எல்லையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு துயரென்றால் உள்ளம் பதைபதைத்து
படபடக்கும் அப்பாவே
எட்டாத தூரத்தில் ஆண்டு 10 இருந்தாலும் கலங்கவில்லை நாம்
கிட்டே வந்தீரென திக்கவும் மகிழ்நிதிருந்தோம்
பட்டங்கள் பல பெற்ற உம்முன்னே - எம்பட்டங்கள் சீர்
காட்டிட துணிந்திருந்தோம் - பெருமையுடன்
சட்டென்று சொல்லாமல் கொள்ளாமல்
நெடுந்தூரம் பிரிந்துவிட்டீர் தாளவில்லை இன்றேமக்கு

## We cannot forget

Awaiting your arrival - the long years
Quietly the dawn has come - bringing you
Actively stepping to the home - taking charge
cleaning, mopping, washing - you have
done this in Londom alone for years.
Making us to learn the things
to lead a life apart from books
but not completing the awaiting task
you dreamt to complete - giving
the academic Jaffna medical students
the needs and requirements they had
the thirst to develop the University
gone - no trace - but to starts by
anyone who could take your foot path
We children Bhanu, Bharath and Chenthuran follow your deeds

**Son Bhanugoban**

இரண்டாவது மகன்

பல்கலைக்கழகத்திற்குள் காலடி வைக்கவே - சில நாள்
என்றிருக்கையிலே - யாழ்
பல்கலைக்கழகத்தின் தேவைதீர்க்கவே - சென்று நான்
சீக்கிரமாய் வந்திடுவேன் - ஆனபொழுது வரை தாயவள்
சிந்தைதனை நோகடியாதே - உன் கருமங்கள் - யாவும்
பக்குவமாய் செய்திடுவீர் - வளர்ந்துவிட்டீர் அதனாலே
தக்கபுத்தி கொண்டுள்ளாய் - தேநீர் போடபடபழகு
சிக்கனமாய் வாழ்ந்திடு - சுவையான கறிபல செய்திடவே
சொல்லிக் கொடுக்கின்றேன் - இனி நீ சிறப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்தில் வாழ்ந்திடவே - சாலவும் புத்தி பல புகட்டிடுவேன்
வடக்கே சென்றே வாழ்த்துக்கள் பெற்றுவந்திடுவேன்
என்றாய் அப்பா - தெற்கே சென்ற தென்ன
புரியாமல் விழிக்கின்றேன்

இளைய மகன்

நாலுவயதில் என்னைவிட்டு லண்டன் சென்ற அப்பா
குழந்தையெனைக் கையிடுக்கில் தூக்கியணைத்தே
சாலவும் கதைபல பேசி கொஞ்சிடுவாய் என அம்மா
அம்மம்மாவும் சொல்லக் கேட்டிடுவேன்
உள்ளன்புடன் அனுப்பிடுவாய் Tin tin கதைப்புத்தகங்கள்
கேட்டால் பேனாவொன்று அனுப்பிடுவாய் Parker தனை
சட்டையென்றால் அதைத்தான் சின்னதாக அனுப்பி நீ
கண்ணுக்குள் என்னுருவம் சின்னதாய் தெரிந்திடுமா?
இந்த ஆண்டு பத்தினுள்ளே நெடிதுயர்ந்து
உன்னுயரம் வந்துவிட்டேன். நேரில் நீ
கண்டதுமே மலைத்திருப்பாய் - கொண்டுவந்தாய் குட்டிக்
காரெல்லோ எனக்கு விளையாட - குறுகிய நாளிலே
மந்திரவித்தை பலவும் காட்டிட்டாய் - படிப்பும்
புன்னகையுடன சொல்லிக் கொடுத்தாய் - உடைந்திட்ட
கண்ணாடிதனையுமே புதிதாய் செய்தெனக்கு தந்தாய்
கேட்டதற்கெல்லாம் யாழ். சென்று மறுபடி
வந்துனைப் பார்ப் பேன் என்றாய் - ஆனாலும்
வருவாயோ? வரமாட்டாய்! இன்றுனை
நிழற்படமாய் காண்கின்றேன்

செந்தூரன

## A Man who cared for the Nation

"He was very humble, silent, active minded, good hearted soul, not only he loved his family but the whole of his people of nation.

He returned back to his people to serve them with so many plans in his mind. It was very sad he didn't get that time. Simple life, and compassion to his people made his soul great. Good-bye my dear brother- in-law, rest peacefully one day your dreams will come true"

**Siva**
**Brother-in-Law**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து வெளிவரும் தேசிய பத்திரிகையான "தினக்குரல" பத்திரிகையின் செய்தி

(டிசெ.24., 2000.)

## டாக்டர்.உக்கிரப்பெருவழுதி யாழ்ப்பாணத்தில் திடீர் மரணம

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நுண்ணுயிரியல் விரிவுரையாள ராக அண்மையில் நியமனம் பெற்றுச் சென்ற டாக்டர்.ஆர். உக்கிரபெருவழுதிப் பிள்ளை மாரடைப்பால் யாழ்ப்பாணத்தில் கால மானார்.

53 வயதான இவர் 10 வருடங்களாக இலண்டன் பொது சுகாதார ஆய்வுகூட நிலையத்தில் கடமையாற்றி வந்தவர். இலண்டன் பல்கலைக்கழகத்திலும் இம்பீரியல் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் சரே பல்கலைக்கழகத்திலும் வைரஸ் நோயியல், பக்டீரியா நோயியல், மூளைகூற்று உயிரியல் ஆகிய துறை களில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ள இவர் நோயியல் துறையில் புலமைப் பரிசில் பெற்றவர்.

கடந்த 17 வருடங்களாக புற்றுநோய் வைத்திய நிபுணராக மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர்.வாணி.யூ.பிள்ளையின் கணவரான இவர் கொழும்பு மருத்துவபீடத்திலும், மொறட்டுவ பொறியியல் பீடத்திலும், கொழும்பு இந்துக் கல்லூரியிலும் பயிலும் மூன்று ஆண்குழந்தைகளின் தந்தை யாவார்.

டாக்டர்.ஆர்.உக்கிரபெருவழுதிப பிள்ளையின் சேவையை யாழ். பல்கலைக்கழகம் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தது. பயன்பெறத் தொடங்கும் வேளையில் இவ்விழப்பு நடைபெற்று ள்ளது.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் Dr.R.உக்கிரப் பெருவழுதிப்பிள்ளை அவர்கள

**BDS(Cey), M.Sc(Bacteriology), M.Sc(Virology), Dip in Tropical Medicine**

(சிரேஷ்ட விரிவுரையாளர்,நுண்ணுயிரியல் துறை,மருத்துவபீடம்)

லண்டன் இம்பீரியல் பல்கலைக்கழகம், சரே பல்கலைக்கழகம் உட்பட முக்கிய பல்கலை க்கழகங்களில் கடமையாற்றிவிட்டு எமது பீடத்தில் சேவையை வழங்க முன்வந்து பணியாற்றிக் கொண்டிருந்த அன்னாரின் திடீர் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரா த்திக்கும்.

20 ஆம் அணி மாணவர்கள்.
யாழ். மருத்துவபீடம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "உதயன்" பத்திரிகையின் செய்தி

(டிசெ.24., 2000.)


## மருத்துவபீட விரிவுரையாளர் காலமானார்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நுண்ணுயிரியல் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ஆர்.உக்கிர வேலுப்பிள்ளை நேற்றைய தினம் காலமானார்.

அண்மையில் லண்டனிலிருந்து வருகை தந்து யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பணியை ஏற்றுக் கொண்ருந்தார்.. யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அவர் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் மாரடைப்பால் மரணமான யாழ்.பல்கலைக்கழக நுண்ணியிரியல் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர்.ஆர். உக்கிரபெருவழுதிப்பிள்ளையின் பூதவுடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது உபவேந்தர், சிரேஷ்ட விரிவுரையாளர், மாணவர்கள் அஞ்சலி செலுத்துவதைக் காண்கிறீர்கள்.

### Consultant Surgeon, National Hospital, Sri Lanka

## Tribute to a great man

I met Dr.R.U.Pillai briefly during short stay in Jaffana.

He had reported in Jaffna a few days earlier as a Microbiologist at the Medical Faculty.

He desired to work in the Jaffna Medical Faculty, as he was a person who estimated his achievement in usefulness and recognition rather than in terms of material reward.

He had an attractive personality and a pleasant manner.

I enjoyed his company for the brief period we were able to speak together.

His sudden shocking death is a tragic loss. His family will miss the selfless and devoted husband and father. His friends will miss an outstanding human being. The Medical Faculty of Jaffna will severely miss the services of an eminent teacher.

I symphathise with all those who will miss Dr.Pillai and grieve for him. He was indeed a man whose memory would be cherished.

**Dr.R.Niles.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பிலிருந்து வெளிவரும் தேசிய பத்திரிகையான "வீரகேசரி" வார வெளியீடு - 08.01.2000

# யாழ்.வைத்திய பீடத்தின் அவலம்

யாழ்ப்பாண வைத்திய பீடம் தகுந்த போதனாசிரியர்களின்றி மிகவும் அவலப்படுகின்றது.

இந்த நிலையில் பல வருடங்களாக ஏறக்குறைய 10 வருடங்களாக லண்டன் பல்கலைகழகங்கள் பலவற்றில் முதுமாணிக்கல்வி கற்று **M.Sc (Bacteriology), M.Sc(Virology), Dip in Tropical Medicine** ஆகிய நுண்ணுயிர்த் துறைத்தகைமைகளோடு யாழ். வைத்திய பீடத்தின் விரிவுரையாளராக டாக்டர்.ஆர். உக்கிரபெருவழுதிப்பிள்ளை சமீபகாலத்தில் கடமையேற்று இருந்தார்.

மிகவும் ஆர்வத்துடனும் துடிப்புடனும் கடமையாற்றவென வந்திருந்த இவர் சடுதியாகமாரடைப்பினால் மரணமானது பல்கலைக்கழக வட்டாரத்தில் ஒரு துர்பாக்கிய நிலையாகும்.

இவர் தமது வாழ்வின் ஒரு குறிக்கோளாகவும் தொண்டாகவும் யாழ். மருத்துவபீடத்தில் விரிவுரை யாற்றுவதை கருதியிருந்தார். மாணவர்களுடன் சகஜமாக பழகக்கூடிய இயல்பை யுடைய இவர். மருத்துவ மாணவர்களிடையே மிகவும் பிரபல்யமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வைத்தியபீடத்தின் தலைவர்களுள் கூடிய - தமக்கு லண்டன் மாநகரில் இருந்த தொடர்புகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் இவர் ஆர்வமுற்றிருந்தார். அத்துடன் சீர்கெட்டுப் போயிருந்த போதனா வைத்தியசாலை அதிபருடன் ஆலோசித்து அதன் பல துறைகளையும் அபிவிருத்தி செய்யவும் எண்ணி யிருந்தார்.

கல்வியில் தகைசான்ற குடும்பத்தில் பருத்தித்துறை தும்பளையில் பிறந்த இவர் மறைவு யாழ்.மருத்துவபீடத்துக்கு ஒரு பேரிழப்பாகும்.

இன்றைய கால கட்டத்தில் படித்தவர்கள் எல்லோரும் மேலைநாட்டு மோகம் கொண்டு - தன்னுடைய நாட்டை பலகாரணங்களுக்காக மறந்து வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில், பத்து வருடங்கள் மேலை நாட்டில் கல்வி பெற்ற இவர் தன்னுடைய நாட்டையும் குறிப்பாக மருத்துவ மாணவர்களையும் மனதில் கொண்டு போர்ச்சூழலில் இருக்கும் யாழ். பூமிக்கு கடமையாற்ற சென்றது இவரது தன்னலம் கருதாா தாய் நாட்டுச் சேவைப் பற்றையே எடுத்துக்காட்டுகிறது.

மூன்று ஆண் மக்களின் தந்தையான இவரின் மூத்த புதல்வர் பானுகோபன் கொழும்பு மருத்துவக் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவனாகவும் இரண்டாவது புதல்வர் மொறட்டுவ பொறியியற் பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவனாகவும் மூன்றாவது புதல்வர் கொழும்பு இந்துக் கல்லூரியின் மாணவனாகவும் கல்வி கற்கின்றனர்.

இவரது பாரியார் வைத்திய கலாநிதி வாணி உக்கிரபெருவழுதிப் பிள்ளை புற்றுநோய் வைத்திய நிபுணராக மகரகம புற்றுநோய் வைத்திய நிலையத்தில் கடமை யாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR.R.UKKIRAPERUVALUTHIPILLAI

Jaffna Medical Faculty is handicapped without properly qualified lecturers. Most professionals have migrated to other lands.

Under this state of affairs a well-educated person in UK, volunt eered to take up an appointment as Micro biologist. He was none other than Dr. R.U. Pillai. He passed away on December 24 - a loss to family and country.

Dr.R.Ukkiraperuvaluthi pillai obtained a basic dental degree BDS(Cey) in 1971 but he did not like to practice Clinical Dentistry. He joined the Postgraduate School of Medicine and did his Diploma in Micro biology in Srl Lanka. Later he joined the London School of Medicine and obtained his M.Sc(Bacteriology), M.Sc(Virology), Diploma in Tropical Medicine.

His main aim in life was to update Jaffna Medical Faculty and Jaffna Teaching Hospital. He had made contact with many personnel when he was in London School of Tropical Medicine. People were willing to help him with cash, materials and staff. Some Professors whom he met had agreed to come to Jaffna if itwas safe in Jaffna. Also he was anxious in maintaining E-Mail and Internet facilities for his department so that he could utilise maximum benefits from London.

He took ten years to complete his post gradute studies and research work. He was away from his wife and children for a long period.

His eldest son, Bhanugoban is in the Colombo Medical Faculty, the second Bharath is in the Engineering stream at Moratuwa Engineering Faculty - a fresher. The third son, Chenthuran is at Colombo Hindu College in Year 10. His wife, Dr. Vani Pillai is attached to the Cancer Institute, Maharagama as a Consultant Radiotherapist and Oncologist.

He hailed from a well reputed family in Thumpalai, Point Pedro. His father was a school pricipal. He completed his school education at Hartley College and entered the Perdeniya Faculty of Dentistry. As a dental surgeon he had served in various places in Sri Lanka - Walasmulla, Dambulla, Anuradhapura, Kandy, Point Pedro and later joined the Jaffna Private Medical College as an Anatomy Lecturer.

His death is a great loss to his family and to the country.

**Raja Srikanthan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Last Message to his wife received on 20.12.2000.

**For my Vanee,**

**Whether live or death**
**Young or old**
**happy or sad**

*When I think about love,*
*I think of you because with you*
*I know love's not just a word*
*it's reality, when I think about the*
*future, I think of you, because*
*my life would not be complete, if*
*I did not have you to share it with,*
*you're the best thing in my life and*
*I want you to know, that*
*I'll forever love you...*
*from the good old day*
*why I touched your hand*
*Sweetheart*


***With All My Love***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் Dr.R.U.பிள்ளை அவர்கள்

LATE DR. R. UKKIRAPERUVALUTHIPILLAI



Born 27.07.1947

Departed 23.12.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acknowledgement

*We sincerely thank and express our deepest gratitute to the Jaffna University Staff and Medical students along with Teaching Hospital Staff, relatives, neighbours and friends who attended the funeral, sent messages of condolence, floral tributes and those who assisted us in numerous ways in our breavement.*

*Also, our sincere thanks to all those who participated in to-day's ceremony*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Printed at Print Graphics**
No. 289 1/2, Galle Road, Colombo-06. Tel. : 596312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org